க்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றம்
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 10.07.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 185 பக்கங்கள் : 08

## நாட்டின் நிதி அமைப்பில் நம்பகத்தன்மை வேண்டும்!

**கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து**



கொழும்பு, ஜூலை. 10
எமது நாட்டின் நிதி அமைப்பின் நம்பகத்தன்மையையும், ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பதும், நிதிப் பரிவர்த்தனை அறிக்கையிடல் நிர்ணயித்துள்ள தரநிலைகளுக்கு இணங்கச் செயற்படுவதும் இலங்கையின் சர்வதேசக் கடமையாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதிப் பரிவர்த்தனை அறிக்கையிடல் நிர்ணயித்துள்ள தரநிலைகளுக்கு இணங்கச் செயற்படுவதை நடைமுறைப்படுத்தத் தவறினால், சர்வதேச நிதி அமைப்பில் இலங்கையின் நம்பகத்தன்மை பாதிக்கப்படும்.


முதலீட்டாளர்களின் நம்பிக்கை குறையும், வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கான செலவு அதிகரிக்கும். அதன் சுமையை இறுதியில் சுமப்பது எமது மக்களே. இந்த உண்மையை நாம் யாரும் மறுக்கவில்லை.

அரசாங்கம் மீண்டும் மீண்டும் இந் தச் சபையிடமும் நாட்டிடமும் கூறுவது என்ன "

07

## யாழ். மக்கள் என்னிடம் நன்றாகப் பேசினார்கள்!

**பிரதி அமைச்சர் அருண ஜயசேகர**



யாழ்ப்பாணம், ஜூலை. 10
நான் யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்தபோது அர்ச்சுனா அங்கு இருக்கவில்லை. எனினும் யாழ்ப்பாண மக்கள் என்னிடம் மிகவும் நன்றாகப் பேசினார்கள் என பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த காணி விடுவிப்பு மற்றும் மக்கள் நலன்சார் விடயங்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே இதனை குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததிலிருந்து இது வரையான காலப்பகுதியில், வடக்கு மற்றும் கிழக்கில் முப்படைகளின் கட்டுப்பாட்டிலிருந்த 64,663 ஏக்கர் காணிகள்

07

## இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 10000 கிலோ கடல் அட்டைகள் சிக்கின!

**மன்னாரில் 13 படகுகளுடன் 26 பேர் கைது**

மன்னார், ஜூலை. 10
இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கடத்தி வரப்பட்ட சுமார் 10 ஆயிரம் கிலோகிராம் நிறையுள்ள கடல் அட்டைகள், மன்னார் சவுத்பார் பகுதியில் வைத்து நேற்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து பல படகுகள் மூலம் கடல் அட்டைகள் இலங்கைக்குக் கடத்தப்படுகின்றன என்று கிடைத்த இரகசியத் தகவலைத்

07

## நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவுக்கு முன் வடக்கு ரயில் சேவையை குறைக்கக்கூடாது!

**அரசிடம் பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டு**

யாழ்ப்பாணம், ஜூலை. 10
நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு வடக்கிற்கான ரயில் சேவையை குறைக்கும் அரசின் தீர்மானத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பொதுஜன பெரமுன யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும் அரசியல் சபை உறுப்பினருமான கீதநாத் காசிலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு - காங்கேசன்துறை இடையேயான இரவு ரயில் சேவையை தினசரி இயக்கத்திலிருந்து வாரத்துக்கு 4 நாள்களாகக் குறைக்கும் தீர்மானம், ஆண்டு தோறும் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு

07

## கைதிகளைத் தேடி அலையும் உறவுகள்

கொழும்பு, ஜூலை. 10
நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் மற்றும் பதற்ற நிலைமைகளை தொடர்ந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கைதிகளின் உறவினர்கள் நேற்றும் சிலரை தேடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

07

## நீர்கொழும்புச் சிறை கைதிகளை தடுத்து வைக்க பொருத்தமற்றது!

**சிறைச்சாலை நிர்வாகம் தீர்மானம்**

கொழும்பு, ஜூலை. 10
நீர்கொழும்பு சிறைச்சாலையில் பதற்ற சூழ்நிலையைத் தொடர்ந்து, அந்த வளாகத்துக்குள் கைதிகளைத் தடுத்து வைப்பது பொருத்தமற்றது எனச் சிறைச்சாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், குறித்த சிறைச்சாலை வளாகம் ஒரு குற்ற பிரதேசமாக கருதப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

07

## கைதிகளின் பாதுகாப்பை உடனே உறுதிப்படுத்துக!

**மனித உரிமை ஆணைக்குழு பணிப்புரை**

கொழும்பு, ஜூலை. 10
நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏனைய சிறைச்சாலைகளில் பதிவான சம்பவங்கள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

அத்துடன், பொறுப்புக்கூறல் மற்றும் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அது

07

## யுத்த காலத்தில் இராணுவம் கைப்பற்றிய தமிழர்களின் நகைகளுக்கு என்ன நடந்தது?

**யுகண்டாவில் முதலீடு செய்யப்பட்டதா என்று சபையில் சிறீதரன் எம்.பி. கேள்வி**

கொழும்பு, ஜூலை. 10
இறுதி யுத்தத்தின் போது வன்னி வைப்பகங்களில் இருந்து இலங்கை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட தமிழ் மக்களின் பல கோடி ரூபாய் பெறுமதியான நகைகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அரசாங்கம் முறையான விசாரணை நடத்த வேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வலியுறுத்தியுள்ளார்.

07

## அராலி மேற்கு கடற்பரப்பில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை. 10
அராலி மேற்கு கடற்பரப்பில், கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 49 வயதுடைய செல்லையா சிவகுமார் என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் நேற்று காலை வழக்கம்போல் கடற்றொழிலுக்காக கடலுக்குச் சென்றிருந்தார்.

இதையடுத்து, நண்பகல் 12.40 மணியளவில் அவர் கடலில் சடலமாக மிதப்பதை

03

## சிறைச்சாலை வன்முறைகளுக்கு அரசு முழுமையாக பொறுப்பேற்கவேண்டும்!

**நளின் பண்டார வலியுறுத்தல்**

கொழும்பு, ஜூலை. 10
சிறைச்சாலைகளில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வன்முறைகள், மரணங்கள் மற்றும் காயங்களுக்கு தற்போதைய அரசாங்கமும் நீதி அமைச்சும் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார காரசாரமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

03

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு ரூ. 25 ஆயிரம் அபராதம்!

கொழும்பு, ஜூலை. 10
மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு வெள்ளவத்தை மெரைன் டிரைவ் வீதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பில், குடிபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேசத் தரத்தில் சுகாதார சேவை வழங்குவதே எங்கள் அரசின் இலக்கு!

### கூறுகிறார் ஜனாதிபதி அநுரகுமார



கொழும்பு, ஜூலை. 10
இலங்கையின் சுகாதார சேவையை வெறும் திருத்தங்களுக்கு அப்பால் சென்று, சர்வதேச தரத்திலான உயர்தர சேவையாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 2027 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்து இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், ஆரோக்கிய சுகாதார நிலையங்களை அமைப்பதன் மூலம் பிராந்திய சுகாதார சேவையை வலுப்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச மருத்துவமனைகளில் நவீன தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம், பொது மக்கள் குறைந்த செலவில் திறமையான மற்றும் தரமான சுகாதார சேவையைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும்.

இதன் மூலம் தனியார்துறையில் சிகிச்சை பெறுவதற்கான செலவு சுமை குறைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த அரசாங்கங்களால் இடைநிறுத்தப்பட்டிருந்த மொனராகலை மாவட்ட மருத்துவமனையின் கட்டடத் தொகுதி, திருகோணமலை, அம்பாறை மற்றும் சிலாபம் மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ளிட்ட 26 பெரும் கட்டுமான திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 48 கட்டுமான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

மேலும், சுவசரிய சேவையை வலுப்படுத்துவதுடன், இனிவரும் காலங்களில் சர்வதேச தரத்திலான, நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட நோயாளர் காவு வாகனங்களை மட்டுமே கொள்வனவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## கொழும்பு பல்கலையில் 71 மாணவர்களுக்கு டெங்கு

கொழும்பு, ஜூலை. 10
கொழும்பு பல்கலைக்கழகத்தில் 71 மாணவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக, அதன் துணைவேந்தர் இந்திக கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்களில் 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவருவதாகவும், ஏனைய மாணவர்கள் மருத்துவ கண்காணிப்பின் கீழ் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்கலைக்கழக வளாகத்தில் கொசு ஒழிப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகள் தீவிரப்படுத் தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோய் பரவல் தீவிரம்;

## கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வி செயற்பாடு இணையவழியில்

கொழும்பு, ஜூலை. 10
கொழும்பு பல்கலைக்கழக வளாகத்துக்குள் டெங்கு நோய்த் தொற்று பரவி வருவதன் காரணமாக, பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் இன்று முதல் ஜூலை 15 ஆம் திகதி வரை இணையவழியில் நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ)

## டெங்கு உயிரிழப்பு 45!

கொழும்பு, ஜூலை. 10
இலங்கையில் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இதுவரை நாடு முழுவதும் மொத்தம் 65,034 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் 17 இலட்சம் இலங்கையர் உள்ளனர்!

கொழும்பு, ஜூலை. 10
தற்போது 17 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளதாக வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நடைபெற்ற விவாதமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதி அமைச்சர் இதனை வெளிப்படுத்தினார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்கள் மூலம் கடந்த 2025 ஆம் ஆண்டில் மாத்திரம் 8.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு நாணய மாற்று வருவாயாக நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் உள்ளவர்கள் வழங்கும் இந்த தனித்துவமான பங்களிப்பை பாராட்டுவதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (அ)

## லக்ஷ்மன் யாப்பா மீது வழக்கு!

கொழும்பு, ஜூலை. 10
முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு முதலீட்டுச் சபை தொடர்பான விடயமொன்றைச் சாதகமாக முடித்துக் கொடுப்பதற்காக, வர்த்தகர் ஒருவரிடமிருந்து 10 இலட்சம் ரூபாய் பணத்தை இலஞ்சமாக பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எல் நினோ காலநிலை தாக்கம்;

## நீர் முகாமைத்துவத்தை வலுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜூலை. 10
எல் நினோ காலநிலை மாற்றங்களைக் கருத்திற் கொண்டு, நாட்டின் நீர் முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நீர் முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான அனைத்து நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளவும், உரிய பதிலளிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் வழமையாகவே உலர்ந்த காலநிலை நிலவுவதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், இந்த வருடம் வறட்சி நிலை தீவிரமடையக்கூடும் என்று எச்சரித்துள்ளார்.

இதேவேளை செப்ரெம்பர் மாத மத்திய பகுதியில் வடகீழ் பருவமழை ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அந்த மாதத்தில் மழைவீழ்ச்சி வழமையை விடக் குறைவாகவே இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ஒக்ரோபர், நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் என வானிலை முன்னறிவிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த காலநிலையை எதிர்கொள்ளும் வகையில் விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் மின்சாரத் சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதற்கமைவாக அனைத்து நிறுவனங்களும் தமது பதிலளிப்புத் திட்டங்களைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு, குறித்த திட்டங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி மீண்டும் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

## "கிராமிய வாழ்விற்கான ஒளியூட்டல்" திட்டம் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை. 10
வட மாகாண மக்களின் கண் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட "கிராமிய வாழ்விற்கான ஒளியூட்டல் திட்டத்தின்" யாழ் மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் எம்.மலரவனால், உருவாக்கப்பட்ட இத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் முதற் கட்டமாக சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்ட நிலையில் இத்திட்டத்தில் அங்குரார்பண நிகழ்வுடன் சுகாதார அதிகாரிகளுக்கான விசேட பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றது.

இதன்போது யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் எம்.மலரவன் திட்டத்தின் நோக்கம் மற்றும் தொழில்நுட்பக் காரணிகள் குறித்து விளக்கமளித்தார்.

இதனூடாக 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தொற்றா நோய் பரிசோதனையுடன், கண் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். தொடர்ந்து கண் பிரச்னைகள் உள்ளவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு மூக்குக் கண்ணாடி மற்றும் வெண்புரை சத்திர சிகிச்சை யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, கிராமப்புற மக்களின் கண் நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் பொருட்டு சுகாதார உத்தியோகத்தர்களுக்கான விசேட பயிற்சிப் பட்டறைகள் இரண்டு கட்டங்களாக நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ப.ஜெயராணி, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வி.பி.எஸ்.டி.பத்திரண, யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன், மருத்துவ நிபுணர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
10.07.2026 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம், ஆனி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழர் விவகாரம்?

தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இனப்பிரச்னை இருக்கின்றது என்னும் விடயம் தொடர்ந்தும் பலவீனமடைந்து கொண்டே செல்கின்றது. மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்தும் நடக்குமா அல்லது நடக்காதா என்னும் கேள்வியுடன் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாண சபை முறைமையை தோற்றுப் போன ஒன்று என்று கூறினாலும் கூட, புதிய ஒன்றை கொண்டுவரும் வரையில் மாகாண சபை முறைமை இருக்கும் என்றே கூறிவருகின்றது. ஆனாலும் முன்னைய ஆட்சியாளர்கள் போன்று தேர்தலை நடத்துவதில் நாட்டம் இல்லாமலேயே இருக்கின்றது. அடுத்த ஆண்டு கூட தேர்தல் நடைபெறுமா என்னும் கேள்விக்கு எவரிடமும் பதில் இல்லை.

எதிர்பாராமல் இடம்பெறும் நெருக்கடிகளை காரணம் காட்டி, தேர்தலை பிற்போடுவதிலேயே அரசாங்கம் குறியாக இருப்பதாகத் தெரிகின்றது. முன்னர் பொருளாதார நெருக்கடியை முன்வைத்து தேர்தல் பிற்போடப்பட்டது. பின்னர், டித்வா புயல் அனர்த்தங்களை காரணம் காண்பித்து தேர்தல் பிற்போடப்பட்டது. இப்போது சிறைக் கலவரத்தால் நாட்டில் அசாதாரணமானதொரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதே வேளை பதட்டமான சூழலும் தென்படுகின்றது. இவை அனைத்தும் அரசாங்கத்திற்கு இன்னொரு நெருக்கடியையும் உணர்த்தி நிற்கின்றது. அதாவது, அரசாங்கத்தின் செல்வாக்கு தொடர்ந்தும் சரிந்து செல்கின்றது. இந்த நிலையில் தேர்தல் தொடர்பில் அவர்கள் யோசிப்பார்கள் என்பது நம்புவதற்கு கடினமானது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ் மக்களின் அரசியல் விவகாரம் தொடர்ந்தும் முக்கியமற்ற ஒன்றாக மாறிவருவது கண்கூடு. மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்று, வடக்கு கிழக்கில் கணிசமான ஆசனங்களை கைப்பற்றி, மாகாண சபை தமிழ் கட்சிகள் வசமானால்மதான், தமிழர் அரசியல் கவனிப்புக்குரியதாக இருக்கும். அதிகாரம் தொடர்பான உரையாடலை முன்னெடுப்பதற்கு ஒரு அரசியல் அடித்தளம் கட்டாயம் வேண்டும். குறைபாடுகள் இருந்தாலும், மாகாண சபை முறைமை ஒன்றுதான் தமிழர்களுக்கு ஒரு அரசியல் அடித்தளத்தை வழங்கக் கூடியதாக இருக்கின்றது. தேர்தல் இடம்பெறாது விட்டால் அந்த வாய்ப்பும் இல்லாமல் போய்விடும்.

எனவே இப்போது மாகாண சபைத் தேர்தல் என்பது அடிப்படையில் தமிழ் மக்களின் அரசியல் இருப்பு மற்றும் அதிகாரப் பகிர்விற்கான அடித்தளமாக மாறிவிட்டது. எவ்வாறான கோரிக்கைகளை தமிழர் தரப்புக்கள் முன்வைத்தாலும் கூட, சுவர் இருந்தால் தான், சித்திரம் வரையலாம் என்னும் நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

# பாக்யராஜும், பாரதிராஜாவும் விட்டுச் சென்ற நினைவுகள்



**தனித்துவமான கதை சொல்லல், மறக்க முடியாத கதாபாத்திரங்கள் மற்றும் மனித உறவுகளின் உண்மையான சித்தரிப்புகள் மூலம் தமிழ் சினிமாவை மறுவடிவமைத்த இரு இயக்குநர்கள்**

கே.பாக்யராஜின் தூறல் நின்று போச்சு திரைப்படத்தைப் பார்க்கச் சென்ற அந்த இரவு எனக்கு இன்னும் அச்சுப்பிசகாமல் நினைவிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் புத்தரி ஏரியிலிருந்து பலத்த காற்று வீச, என் உறவினரின் சைக்கிள் கேரியரில் அமர்ந்து அவர் மிதித்துச் சென்றார். அன்று இரவு, என் உறவினரின் பக்கத்து வீட்டுத் திண்ணையில் நாங்கள் தூங்கினோம்.

காலையில் முகத்தில் சுட்டெரிக்கும் சூரியன் படர விழித்தபோதும், அந்தத் திரைப்படம் என் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. அதன் மறக்க முடியாத பாடல்கள் குறிப்பாக 'எரிக்கரை பூங்காற்றே' பல தசாப்தங்களுக்குப் பிறகும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

பாக்யராஜ் மறைந்த அன்று, நான் கும்பகோணம் அருகிலுள்ள தூக்காச்சி என்ற கிராமத்தில் இருந்தேன். எனது பணியக பிரதானி (Chief of Bureau) ரம்யா கண்ணன் இந்தச் செய்தியை எனக்குத் தெரிவித்தார். நான் அதிர்ச்சியடைந்தேன். அதற்குச் சரியாக இரண்டு வாரங்களுக்கு முன்புதான், எனக்குப் பிடித்த மற்றொரு இயக்குநரான பாரதிராஜாவும் காலமானார்.

பாக்யராஜ், பாரதிராஜாவின் உதவி இயக்குநராக இருந்தவர். அவர்கள் இருவரும் இணைந்து தமிழ் சினிமாவின் இலக்கணத்தையே மாற்றியமைத்தார்கள். பல தசாப்தங்களாக நான் அவர்களின் படைப்புகளை வியந்து பாராட்டியதால், பாக்யராஜின் இரங்கல் குறிப்பையும் - அதற்கு முன்பு பாரதிராஜாவின் இரங்கல் குறிப்பையும் - எழுதுவது எனக்கு இயல்பாகவே வந்தது.

ஒரு இயக்குநர், நடிகர், திரைக்கதை ஆசிரியர் மற்றும் வசன கர்த்தாவாக, வணிக ரீதியான திரைப்பட உருவாக்கத்தின் அனைத்துப் பொதுவான விதிகளையும் பாக்யராஜ் உடைத்தெறிந்தார்.

மனித உறவுகளைப் பற்றிய இயல்பான புரிதலைக் கொண்ட ஒரு திறமையான கதை சொல்லியான அவர், பிரம்மாண்டமான ஹீரோ பிம்பங்களை வீழ்த்தி, சாதாரண தெருவோர மனிதனை அந்த இடத்தில் அமர்த்தினார். ஒருவரின் ஈர்ப்பு என்பது கம்பீரமான திரை ஆளுமையிலோ அல்லது மிகைப்படுத்தப்பட்ட வீரத்திலோ தங்கியிருக்கவில்லை என்பதை அவர் நிரூபித்தார். புத்திக் கூர்மை, புத்திசாலித்தனம், பலவீனம் மற்றும் சுய-மரியாதையைக் குறைத்துக்கொள்ளும் நகைச்சுவை ஆகியவையும் அதே அளவு ஈர்க்கக்கூடியதாக இருக்கும் என்பதை அவர் காட்டினார்.

ஒரு எளிய இளைஞன் தன் சாமர்த்தியத்தால் பெண்ணின் இதயத்தைக் கவர முடியுமே தவிர, ஆண் ஆதிக்கத்தால் அல்ல என்பதை அவரது படங்கள் காட்டின.

இன்று போய் நாளை வா திரைப்படத்தில், அவரும் அவரது நண்பர்களும் கதாநாயகியின் அன்பைப் பெற எதையும் செய்யத் தயாராக இருப்பார்கள். பாக்யராஜின் கதாபாத்திரம் கதாநாயகியின் குடும்பத்தினருடன் நெருங்குவதற்காக அவளுடைய தாயாருடன் ரேஷன் கடைக்குச் செல்லும் கதாநாயகியின் தங்கையின் நோயைக் குணப்படுத்தும் என்று நம்பப்படுவதால் ஒரு கழுதையைக்கூட படம் வரைந்து காட்டும்.

பாக்யராஜின் அசாத்தியமான நகைச்சுவை உணர்வாலும் கச்சிதமான நகைச்சுவை தருணத்தாலும் (Comic timing) இத்தகைய காட்சிகள் நம்பகத்தன்மை வாய்ந்தவையாக மாறின.

இதற்கு நேர்மாறாக, பாரதிராஜா மிகவும் தீவிரமான கதைக் களங்களைக் கையாண்டார், கிராமப்புற தமிழ்நாட்டின் உணர்வு பூர்வமான நிலப்பரப்பை வியக்கத்தக்க துல்லியத்துடன் படம்பிடித்தார்.

அவரது படங்கள் திரை விலகிய பிறகும் நீண்ட நேரம் மனதில் நிலைத்து நிற்கும் வசனங்களால் அடையாளப்படுத்தப்பட்டன. அப்படி என் மனதில் எதிரொலிக்கும் ஒரு வசனம், 16 வயதினிலே படத்தின் இறுதிக் கட்ட காட்சிகளில் ஸ்ரீதேவி, கமல் ஹாசனிடம் உருகிப் பேசும் அந்த வசனம் "இந்த மயிலு உனக்காகவே எப்பவுமே காத்திருப்பா".

பாக்யராஜின் சுவரில்லாத சித்திரங்கள் படத்தில், கல்லாப்பெட்டி சிங்காரமும் கவுண்டமணியும் நடிக்கும் நகைச்சுவைக் காட்சிகள், உண்மையான கொங்கு வட்டார வழக்கில் பேசப்பட்டு, சமூகத்தைப் பற்றிய அவரது ஆழமான புரிதலுக்குச் சான்றாக விளங்குகின்றன. அந்தப் படத்திலிருந்தே, ஒரு அப்பாவி மனிதனை விவரிக்கப் பயன்படுத்தப்படும் "சிலுவானம்" என்ற வார்த்தையை நான் கற்றுக்கொண்டேன்.

அதேபோல், தெருவோரத் தையல்காரரின் புலம்பலும் மறக்க முடியாதது. "வேப்பங்காய்க்குக்கூட இரண்டு காகம் வருது. எனக்கு கடன்காரன்தான் வாரான்".

பாரதிராஜாவினதும். பாக்யராஜினதும் பெரும்பாலான படங்களை நான் டூரிங் டாக்கீஸ்களில்தான் பார்த்தேன். அந்த எளிய திரையரங்குகள், படபடக்கும் புரொஜெக்டர், தரையில் பரப்பப்பட்ட மண்ணின் வாசனை, மற்றும் ஒரு பஞ்ச் வசனம் பேசப்படும் போதெல்லாம் பார்வையாளர்களின் கூட்டு உற்சாகம் ஆகியவை படம் பார்ப்பதை ஒரு மறக்க முடியாத அனுபவமாக மாற்றின.

எங்கள் ஊர்களில் கோடைக்காலக் கோயில் திருவிழாக்களின் போது, நையாண்டி மேளக் குழுவினர் பெரும்பாலும் பாக்யராஜின் படங்களின் பாடல்களையே வாசிப்பார்கள். இன்றும் கூட, நான் அத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போதெல்லாம், மௌன கீதங்கள் படத்திலிருந்து "மூக்குத்தி பூமேலே" பாடலையும் சுவரில்லாத சித்திரங்கள் படத்திலிருந்து "காதல் வைபோகமே" பாடலையும் வாசிக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்வேன்.

நான் மௌன கீதங்கள் படத்தை ஒரு சிறுமி, அவளுடைய தந்தை மற்றும் அவளது சகோதரனுடன் பார்த்தேன். அதற்குள், நான் அந்தப் படத்தில் வரும் குழந்தைக் கதாபாத்திரத்தைப் போல கண்ணாடி அணியத் தொடங்கியிருந்தேன், இதனால் என் வகுப்புத் தோழர்களால் தொடர்ந்து கேலி செய்யப்பட்டேன். இருப்பினும், முற்றிலும் மாறுபட்ட ஒரு காரணத்திற்காக நான் அந்தப் படத்தை இன்றும் போற்றுகிறேன். என்னுடன் அமர்ந்து அந்தப் படத்தைப் பார்த்த அந்தச் சிறுமிதான், பல வருடங்களுக்குப் பிறகு என் மனைவியானாள்.

(தி இந்து, பி.கோலப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்ப்புகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும். எதிலும் பொறுமை தேவைப்படும்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். மதிக்கப்படுவீர்கள். இனிமையான நாள்.

**கடகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும்.

**சிம்மம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் சில சூட்சமங்களை கற்றுக் கொள்வீர்கள். தடைகள் ஏற்படும்.

**துலாம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். எதிர்பாராத வெற்றி கிடைக்கும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். புதுவேலை கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினரின் ஆதரவு பெருகும். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

# யாழ். மாவட்டத்தில் 7 மாதங்களில் 694 டெங்கு நோயாளர் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை. 10

யாழ். மாவட்டத்தில், இந்த வருடத்தின் இன்று வரையிலான காலப்பகுதியில் டெங்கு நோயுடன் 694 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எந்தவித இறப்பும் இந்த வருடம் பதிவு செய்யப்படவில்லை என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு விசேட கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வருடமும் யாழ். மாவட்டத்தில் எந்த ஒரு இறப்புமே பதிவு செய்யப்படவில்லை. கடந்த வருடமும் இந்த வருடம் ஜூன் மாதம் இறுதிப்பகுதி வரை டெங்கு நோய் யாழ். மாவட்டத்தில் பூரணமான கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

ஆனால் தற்போது நாட்டின் தென்பகுதியில், ஏனைய பல மாகாணங்களில் டெங்கு நோயின் பரம்பல் மிகத் தீவிரமாகக் காணப்படுகின்றது. இந்த பின்னணியில், ஜூலை மாதம் - இந்த மாதத்தின் முதல் 7 நாள்களில், 65 நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டி ருக்கின்றார்கள். இது ஒரு சடுதியான அதிகரிப்பாகும்.

மேல் மாகாணத்திலே குறிப்பாக கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் அதிகமான டெங்கு நோயாளர்கள் தற்போது இனங்காணப்பட்டிருக்கின்றார்கள்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் தென்பகுதியில், குறிப்பாக மேல் மாகாணத்தில் இருக்கின்ற பல்கலைக்கழகங்களில், உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கின்றார்கள்.

அதேபோன்று பலர் தொழில் நிமித்தம் யாழ்.மாவட்டத்திலிருந்து கொழும்பில் தங்கியிருந்து தொழில் செய்து வருகின்றார்கள்.

அவர்கள் விடுமுறைக்கு இங்கே வருகின்றபோது, பலர் இங்கே டெங்கு நோயுடன் வந்து எங்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்கள்-என்றார். (அ)

# சட்டவிரோதமாக முதிரை மரப் பலகைகள் கடத்திய வாகனத்தை மடக்கியது பொலிஸ்!

**சாரதி தப்பியோட்டம் உதவியாளர் கைது!**

கிளிநொச்சி, ஜூலை. 10

கிளிநொச்சியில் சட்டவிரோதமாக முதிரை மரப்பலகைகளைக் கடத்திச் சென்ற கப் ரக வாகனம் ஒன்றை பல கிலோ மீற்றர் தூரம் துரத்திச் சென்று பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் வாகனத்தின் சாரதி தப்பியோடியுள்ள நிலையில் அவரது உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சட்டவிரோதமாக முதிரை மரப்பலகைகளை ஏற்றிச் சென்ற கப் ரக வாகனம் ஒன்று, பொலிஸாரின் சோதனையில் சிக்காமல் தப்பிக்க முயன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 வீதியில் பயணித்தால் பொலிஸாரிடம் சிக்கக்கூடும் எனக் கருதிய சாரதி, இரணைமடுச் சந்தியிலிருந்து திருவையாறு உள்வீதிக்குள் வாகனத்தைத் திருப்பிச் சென்றுள்ளார். திருவையாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் நடவடிக்கையாக பொலிஸார் வீதித்தடை அமைத்திருந்தனர்.

அங்கு வாகனத்தை மறித்துச் சோதனை செய்ய முயன்றபோது, பொலிஸாரின் உத்தரவை மீறிச் சாரதி அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தி தப்பிச் சென்றுள்ளார். இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி பொலிஸார் மோட்டார் சைக்கிள்களில் வாகனத்தைத் தொடர்ந்து பல கிலோமீற்றர் தூரம் துரத்திச் சென்றனர்.

திருவையாறு, இரத்தினபுரம், டிப்போ சந்தி, கனகபுரம், உதயநகர், விவேகானந்தா வீதி மற்றும் பாரதிபுரம் வழியாக ஆபத்தான முறையில் பயணித்த கப் ரக வாகனம், இறுதியில் ஏ-9 வீதியின் 155ஆம் கட்டைப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது சக்கரத்தின் ஆணிகள் உடைந்ததால் தொடர்ந்துச் செல்ல முடியாமல் நின்றது.

இதையடுத்து சாரதி அங்கிருந்து தப்பியோடிய நிலையில், வாகனத்தில் இருந்த அவரது உதவியாளரை பொலிஸார் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட கப் ரக வாகனமும், அதிலிருந்த பெருமளவிலான சட்டவிரோத முதிரை மரப்பலகைகளும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், தப்பியோடிய சாரதியை கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

**பல்லகண்டல் அந்தோனியார் திருவிழா;**

# மன்னார்-புத்தளம் பாதையை 5 நாள்கள் திறக்க கோரிக்கை

மன்னார், ஜூலை. 10

முள்ளிக்குளம் பல்லகண்டல் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு மக்கள் வழிபடச் செல்வதற்கு வசதியான, மூடப்பட்டுள்ள மன்னார்-புத்தளம் பாதையை ஐந்து நாள்களுக்கு மட்டும் திறந்து தருமாறு அப்பகுதி மக்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி முள்ளிக்குளம் பகுதியிலுள்ள ஆலயப் பாதை முன்பாக மக்கள் ஒன்றிணைந்து அமைதி வழி கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

முள்ளிக்குளம் பள்ளகண்டல் அந்தோனியாரை, இவ்வருடம் தரிசிக்க முடியாதபடி பாதை மூடப்பட்டுள்ளதாக அறிகிறோம். இது மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. எங்கள் ஊர் ஆலயத்துக்குச் சென்று நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற முடியாதநிலையில் உள்ளோம்.

"எமது வாழ்வாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு, குறைந்த பட்சம் ஐந்து நாட்களுக்காவது பாதையைத் திறந்து தாருங்கள்" என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.


இது தொடர்பில் முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி ரெரன்ஸ் அடிகளார் கருத்து தெரிவிக்கையில்-

யுத்தத்திற்குப் பின் முள்ளிக்குளம் கிராமம் கைவிடப்பட்ட நிலையில், மக்களின் பூர்வீக நிலங்கள் கடற்படையினர் வசம் உள்ளன. மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்தாலும், இந்த ஆலயமே ஆன்மீகத் தாகத்தைத் தீர்க்கும் இடமாக உள்ளது.

தற்போது மறிச்சுக்கட்டி- புத்தளம் பாதை மூடப்பட்டுள்ளதால், மக்கள் ஆலயத்திற்குச் செல்ல சுமார் 250 கி.மீ தூரம் சுற்றி, அநுராதபுரம் வழியாக செல்லவேண்டியுள்ளது.

இப்பாதை வழியாகச் சென்றால் வெறும் 30 கி.மீ தூரமே ஆகும். வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களால் இவ்வளவு தூரம் பயணம் செய்வது சாத்தியமற்றது. எனவே, மக்களின் மதக் கடமைகளை நிறைவேற்ற பாதை திறந்து போக்குவரத்திற்கு அனுமதிக்கவேண்டும்-என்றார். (அ)

# வெற்றுக் காணிக்குள் கைக்குண்டு!



யாழ்ப்பாணம், ஜூலை. 10

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் பகுதியில் உள்ள காணி ஒன்றில் கைக்குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது.

காணியின் உரிமையாளர் காணியை சுத்தம் செய்யும்போது இந்த கைக்குண்டு அவதானிக்கப்பட்டது.

அந்த கைக்குண்டு நீதிமன்றத்தின் உத்தரவு பெறப்பட்டு மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறைச்சாலை உயிரிழப்பை வைத்து அரசியல் செய்யும் எதிர்க்கட்சியினர்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க சாடல்

கொழும்பு, ஜூலை. 10

நீர்கொழும்பு சிறைச்சாலை விவகாரத்தை எதிர்க்கட்சியினர் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றும், உயிரிழப்புகளைக் கூட அரசியல் இலாபத்துக்காக அவர்கள் கையாள்கின்றனர் என்றும் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

"நீர்கொழும்பு சிறைச்சாலை விவகாரம் தொடர்பில் நீதி அமைச்சர் ஏற்கனவே விரிவான விளக்கங்களை அளித்து, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். இருப்பினும், எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாகப் போலியான



குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதை எதிர்க்கட்சியினர் ஏதோ மகிழ்ச்சியுடன் பேசுவதைப் போல் உணர்கின்றேன். இத்தகைய உயிரிழப்புகளைக் கூட குறுகிய அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்துவது முற்றிலும் தவறானதாகும்."-என்றார்.

இதன்போது, நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் முன்வைத்த கருத்துகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார்.

"ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று உறுப்பினர் மரிக்கார் குறிப்பிடுகின்றார். 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், 2026 ஆம் ஆண்டளவில் இலங்கை பொருளாதாரம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இது சர்வதேச நாணய நிதியத்தின் தரவுகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலக வங்கியும் இலங்கையை நடுத்தர வருமானம் பெறும் நாடு என அறிவித்துள்ளது. இவ்வாறான யதார்த்தங்களை மறைத்து, பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சியினர் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர்." - என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு சமூக ஊடக தடை குறித்து பரிசீலனை

கொழும்பு, ஜூலை. 10

இலங்கையில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கான அனுமதியை மட்டுப்படுத்துவது அல்லது தடை செய்வது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த யோசனை தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், இந்த முயற்சியை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்கமும் வேள்ட் விசன் அமைப்பும் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (அ)

# சிறைச்சாலை வன்முறையில் இந்தியர் ஒருவரும் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை. 10

நீர்கொழும்பு, சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த கைதிகளில் ஓர் இந்தியரும் அடங்குவார்.

உயிரிழந்தவர் 73 வயதுடைய ஆண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மேலும் ஒரு சிறை அதிகாரி பலத்த காயங்களால் உயிரிழந்ததைத் தொடர்ந்து, இம்மோதலில் பலியானவர்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறையில் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதற்கிடையில், அந்த இந்தியரின் உயிரிழப்பு குறித்து கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் இதுவரை எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிக்கையையும் வெளியிடவில்லை. (அ)

# உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு; அரிசி ஆலை உரிமையாளர்கள் இணக்கம்!

கொழும்பு, ஜூலை. 10

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உத்தரவாத விலைகளின் கீழ் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அனைத்து அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அரிசி ஆலை உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் நாடு நெல்லை 120 ரூபாய்க்கும், சம்பா நெல்லை 130 ரூபாய்க்கும், கீரி சம்பா நெல்லை 140 ரூபாய்க்கும் கொள்வனவு செய்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்து இந்த உத்தரவாத விலைகளில் நெல்லைக் கொள்வனவு செய்ய ஆலை உரிமையாளர்கள் தயாராக இருப்பதாகவும், இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடிந்தால் சந்தையில் அரிசி விலையைக் குறைக்க அவர்கள் உடன்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# தொழில் வல்லுநர்கள் அமைப்பு பிரதமருடன் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை. 10

இலங்கை தொழில்சார் வல்லுநர்கள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

பல்வேறு துறைகளில் பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு நேரடியாக தொழில்சார் ஆலோசனைகளை வழங்கும் பொறிமுறையொன்றை உருவாக்க எதிர்பார்ப்பதாக, இலங்கை தொழில்சார் வல்லுநர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

விவசாயம், கட்டுமானம், மருத்துவம் மற்றும் சட்டம் உள்ளிட்ட துறைகளில் சவால்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு, அந்தந்த தொழில்சார் சங்கங்களின் ஊடாக முன்கூட்டிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கும் விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒபிஏ நிறுவனம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதன்போது நாட்டின் தொழில்சார் தரத்தை மேம்படுத்துவதற்கும் தேசிய அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் தொழில்சார் வல்லுநர்கள் வழங்கும் பங்களிப்பை பிரதமர் பாராட்டினார்.

தொழில்சார் தகைமையையும் தேசிய சேவையையும் வலுப்படுத்தும் முயற்சிகளுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை தொழில்சார் வல்லுநர்கள் அமைப்பின் தலைவர், உப தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சகல வர்த்தக நிலையங்களிலும் தீயணைப்பு கருவிகள் கட்டாயம்!

## மட்டு. மாநகர சபை முதல்வர் உத்தரவு



மட்டக்களப்பு, ஜூலை. 10

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக வர்த்தக நிலையங்கள், தங்குமிடங்கள் போன்ற இடங்களில் தீ விபத்துகள் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில், பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அனைத்து வர்த்தக நிலையங்களில் தீயணைப்பு முன்னெச்சரிக்கை கருவிகளை கட்டாயம் பொருத்த வேண்டும் என மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மட்டு மாநகர சபையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு மாநகர சபையின் நகரப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டு கடைகள் தீப்பற்றி எரிந்துள்ளன. ஆரம்பகட்ட தகவல்களின்படி, இந்த விபத்து மின் ஒழுக்கு காரணமாக ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இது மட்டுமன்றி, அண்மைக்காலமாக மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடைத்தொகுதிகள் மற்றும் தங்குமிடங்கள் போன்றவற்றிலும் தொடர்ச்சியாக தீ விபத்துகள் பதிவாகி வருகின்றன.

இவ்வாறான அவசர காலங்களில் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தங்களை அர்ப்பணித்து, தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து பெரும் சேதங்கள் ஏற்படாமல் தடுத்து வருகின்றனர்.

தீ விபத்துகளிலிருந்து வர்த்தக நிலையங்களையும் பொதுமக்களையும் பாதுகாப்பது மாநகர சபையின் தலையாய கடமையாகும். இதன் அடிப்படையில், மட்டக்களப்பு நகர வர்த்தகர்களை அழைத்து ஏற்கனவே விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் அனைத்து வர்த்தக நிலையங்களில் கார்பன்-டை-ஆக்சைடு கொண்ட தீயணைப்பு கருவிகள் (சிலிண்டர்) கட்டாயம் பொருத்தப்பட வேண்டும். தீயணைப்பு கருவிகள் பொருத்தாத வர்த்தகர்களுக்கு, அடுத்த புதிய வருடங்களுக்கான வியாபார உரிமங்கள் எக்காரணம் கொண்டும் வழங்கப்படமாட்டாது.

தீ விபத்து ஏற்படும் ஆரம்பக் கட்டத்திலேயே, அங்குள்ளவர்கள் இந்த தீயணைப்பு கருவியைப் பயன்படுத்தி தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். இதன் மூலம், மாநகரசபை தீயணைப்பு பிரிவினர் 5 முதல் 10 நிமிடங்களுக்குள் சம்பவ இடத்துக்கு வந்து தீயை முழுமையாக அணைப்பதற்கு அது ஏதுவாக அமையும். இல்லையெனில், தீ பெரும் அளவில் பரவி அதிக உயிர் மற்றும் சொத்துச் சேதங்களை ஏற்படுத்திவிடும்.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான தங்குமிடங்கள், விடுதிகள், வர்த்தக தளங்கள் போன்றவற்றில் தீ பாதுகாப்பு என்பது தற்போதைய மிக அத்தியாவசிய தேவையாக மாறியுள்ளது. இதன் காரணமாக, மாநகர சபையானது திருகோணமலை, அம்பாறை, மற்றும் மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களில் "தீ பாதுகாப்பு சான்றிதழ்களை" வழங்கி, இக்கருவிகளை பொருத்துவதற்கான அறிவுறுத்தல்களை தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது-என்றார். (அ)

# திருமலை புத்தர் சிலை விவகாரம் வழக்கு ஒக். 7 வரை ஒத்திவைப்பு

திருமலை, ஜூலை. 10

திருகோணமலை கடற்கரையின் கரையோர பாதுகாப்பு வலயத்துக்குள் சட்டவிரோதமான முறையில் கட்டடம் அமைத்தமை மற்றும் புத்தர் சிலையினை அங்கு நிறுவியமை தொடர்பான வழக்கு ஒக்ரோபர் 7ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பை மீறி துறவிகளைக் கைது செய்வதற்கு முன்னர் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை வழிமுறைகளை கரையோரப் பாதுகாப்பு திணைக்களமும் பொலிஸாரும் பின்பற்றுவதில் தவறிழைத்துள்ளனர் என்று வழக்கின் எதிராளிகளில் ஒருவரான பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் கிரிஷாந்த நிஸ்ஸங்க எழுத்துமூலம் ஆன சமர்ப்பணத்தை சமர்ப்பித்தார்.

இதேவேளை தாமும் இதே நிலைப்பாட்டில் உள்ளதாக ஏனைய எதிராளிகள் தரப்பில் மன்றில் ஆஜரான சிரேஸ்ட வழக்கறிஞர் சஞ்ஜீவ வீர விக்ரம வாதங்களை முன்வைத்தார்.

இதனை கருத்தில் கொண்ட திருகோணமலை பிரதம நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுதீன் இது தொடர்பாக எழுத்து பூர்வமான சமர்ப்பணங்களை மன்றில் முன்வைக்க கால அ[illegible] வழக்கை ஒக்ரோபர் 7ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

சாட்சியங்களை முன்வைத்த வழக்கறிஞர் சஞ்சீவ வீர விக்ரம, வழக்குக் கோப்பில் உள்ள ஆவணங்கள் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆவணங்கள் மட்டுமே என்றும், பிக்குகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து பௌத்த விவகார ஆணையரிடமிருந்தோ அல்லது புத்தசாசன அமைச்சிடமிருந்தோ எந்த ஆவணங்களும் பெற்றுக்கொள்ளப்பட வில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

புத்த சாசனத்தைக் கையாளும்போது, அதன் பாதுகாப்பு மற்றும் பேணல் குறித்து உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். துரைராஜா வழங்கிய நீதிமன்றத் தீர்ப்பை அரசாங்க அதிகாரிகள் அறிந்துகொள்ளாத நிலையில், இந்த வழக்கைத் தொடர்வது சிக்கலானது என்றும் தமது வாதத்தை மன்றில் முன்வைத்தார்.

இவற்றை கருத்தில் கொண்ட நீதிபதி, தமது தரப்பு சமர்ப்பணங்களை எழுத்துப்பூர்வ அறிக்கையாக மன்றுக்கு முன்வைக்க வாய்ப்பளித்து, வழக்கை ஒக்ரோபர் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேலும், இதுவரை நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிராளிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறும் பொலிஸ் தரப்புக்கு உத்தரவிட்டார். (அ)

# கல்முனை உப பிரதேச செயலக வழக்கு; செப்ரெம்பர் 7 ஆம் திகதி விசாரணைக்கு

அம்பாறை, ஜூலை. 10

கல்முனை உப பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு வழக்கு நேற்று முன் தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்குடன் தொடர்புடைய மேலும் இரு மனுக்களும் அதே அமர்வில் நீதிமன்றத்தின் முன் எடுத்துக்கொள்ளப்பட்டன.

வழக்கு விசாரணையின்போது, தவராசா கலையரசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகி, கல்முனை உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது தொடர்பான சட்ட மற்றும் நிர்வாக அம்சங்களை விளக்கி, ஒரு மணி நேரத்திற்கும் மேலாக விரிவான சட்ட வாதங்களை முன்வைத்தார்.


அதேவேளை, இடையீட்டு எதிர்மனுதாரர்களாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ. கலீல் ரஹ்மான் ஆகியோரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா மற்றும் சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன ஆகியோர் அடங்கிய சட்டத்தரணிகள் குழு ஆஜானர்.

மேலும், சமூக செயற்பாட்டாளர்களான முபாரிஸ் எம். ஹனீபா மற்றும் ஏ.எம். நசீர் ஆகியோர் தாக்கல் செய்துள்ள தொடர்புடைய வழக்குகளும் நேற்று முன் தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இடையீட்டு மனுதாரர்களின் சட்ட வாதங்களும், ஏனைய தொடர்புடைய வழக்குகளின் மேலதிக விசாரணைகளும் பின்னர் தொடரப்படவுள்ள நிலையில், வழக்கை செப்ரெம்பர் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அன்றைய தினம் இடையீட்டு மனுதாரர்கள் சார்பிலான சட்ட வாதங்களும், தொடர்புடைய வழக்குகளின் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ)

# கிழக்கு மாகாண பிரதம செயலராக குமாரசிங்கம் குணநாதன் நியமனம்



திருமலை, ஜூலை. 10

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் கிழக்கு மாகாண பிரதம செயலாளராக குமாரசிங்கம் குணநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான குமாரசிங்கம் குணநாதன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராகவும், குச்சவெளி, வெருகல் மற்றும் மண்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# தாதியர்களிடம் பணம் பறிக்கும் மோசடி கும்பல்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 10

தாதியர்களின் வருடாந்த இடமாற்றங்களை வழங்குவதாகக் கூறி, சட்டவிரோதமான முறையில் பணம் அறவிடும் மோசடி கும்பல் ஒன்று இயங்கி வருவதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ள அமைச்சின் செயலாளர், இவ்வாறான மோசடிக்காரர்களிடம் சிக்கி ஏமாற வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார்.

தாதியர்களின் இடமாற்றங்கள் சட்டபூர்வமான வழிமுறைகளின்படி, சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சினாலோ அல்லது மாகாண சுகாதார அமைச்சுக்களினாலோ மட்டுமே மேற்கொள்ளப்படும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, அமைச்சின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி ஒருவரால் விடுக்கப்படும் எழுத்துபூர்வமான கோரிக்கைக்கு புறம்பாக, வேறு எந்தவொரு தரப்பினருக்கும் தாதியர்கள் தங்களின் தகவல்களை வழங்கக்கூடாது என சுகாதார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மோசடிகள் அல்லது ஊழல்கள் தொடர்பான தகவல்கள் ஏதேனும் இருப்பின், அதனை உடனடியாக அமைச்சுக்கு அறிவிக்குமாறும் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார்.

# காரைதீவு பொலிஸ் பிரிவில் உள்ள வழக்குகளை கல்முனை நீதிமன்றங்களுக்கு மாற்றவேண்டும்!

## காரைதீவு பிரதேச சபையில் தவிசாளர் கோரிக்கை

அம்பாறை, ஜூலை. 10

சம்மாந்துறை நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து காரைதீவு பிரதேச நீதிமன்ற நடவடிக்கைகளை விலக்கி காரைதீவு பொலிஸ் பிரிவின் நீதிமன்ற நடவடிக்கைகளை கல்முனை நீதிமன்றங்களுடன் இணைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க காரைதீவு பிரதேச சபையில் தவிசாளர் எஸ். பாஸ்கரன், உப தவிசாளர் எம்.எச்.எம். இஸ்மாயில் ஆகியோரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபையின் கூட்டம் நேற்று தவிசாளர் எஸ். பாஸ்கரன் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நாட்டின் நிதி...

நிதி நடவடிக்கைப் பணிக்குழு இதைக் கோருகிறது." "நிதி நடவடிக்கைப் பணிக்குழு இதைக் கட்டாயப்படுத்துகிறது." "எனவே இந்தச் சட்டமூலங்களை நிறைவேற்ற வேண்டியது தவிர வேறு வழியில்லை.

"நிதி நடவடிக்கைப் பணிக்குழு தரநிலைகளிலிருந்து இலங்கை விலக வேண்டும் என்று இந்தச் சபையில் யாரும் கோரவில்லை. மாறாக, நிதி நடவடிக்கைப் பணிக்குழுவின் தரநிலைகளுக்கு நாம் முழுமையாக இணங்க வேண்டும். ஆனால் நிதி நடவடிக்கைப் பணிக்குழு எண்ணியபடி ஆதார பூர்வமான, விகிதாசாரமான, ஆபத்து மதிப்பீட்டின் அடிப்படையிலான ஒழுங்குமுறையின் மூலமே இணங்க வேண்டும்.

நிதி நடவடிக்கைப் பணிக்குழு ஒருபோதும் கோராத அதிகாரங்களை நிறைவேற்று அதிகாரத்திற்கு வழங்குவதற்கான காரணமாக நிதி நடவடிக்கைப் பணிக்குழுவின் பெயரைப் பயன்படுத்தக் கூடாது. தேசிய பாதுகாப்பும் ஜனநாயகச் சுதந்திரமும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. ஒரு உண்மையான ஜனநாயக அரசு இரண்டையும் ஒருசேர பாதுகாக்கும்.

எனவே, இந்தச் சட்டமூலங்களை மீளாய்வு செய்து, அவை நிதி நடவடிக்கைப் பணிக்குழுவின் உண்மையான தரநிலைகளுக்கு அமைவாக இருப்பதையும், நீதித்துறையின் மேற்பார்வையை வலுப்படுத்துவதையும், இந்த பாராளுமன்றம் பாதுகாக்க வேண்டிய அரசியலமைப்பு உரிமைகளையும் ஜனநாயகச் சுதந்திரங்களையும் உறுதிப்படுத்துவதையும் நான் வலியுறுத்துகின்றேன்-என்றார். (அ)

## யாழ். மக்கள்...

விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதில் கடற்படையினரிடமிருந்து 2,706 ஏக்கர் காணிகளும், விமானப்படையினரிடமிருந்து 3,391 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்றதன் பின்னர், 2024 இறுதிப் பகுதியிலிருந்து 2026 ஜனவரி வரையான காலப்பகுதியில் மட்டும் 692 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மேலும், இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் இதுவரை முப்படைகளின் கட்டுப்பாட்டிலிருந்து 374 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் மேலும் 243 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், வட மாகாணத்தை மட்டும் பொறுத்தமட்டில், இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த 23,850 ஏக்கர் காணிகளில் இதுவரை 21,280 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் விபரித்தார்.

தனது யாழ்ப்பாண விஜயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், தான் யாழ்ப்பாணத்துக்கு நேரில் விஜயம் செய்திருந்தபோது அங்கு அர்ச்சுனா இருக்கவில்லை எனவும், ஆனால் தான் நேரடியாகவே களத்துக்குச் சென்று அங்குள்ள மக்கள், அரச அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் கோவில் குருமார்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

அங்குள்ள சாதாரண அடித்தட்டு மக்கள் என்னிடம் மிகவும் சுமுகமாகவும் நன்றாகவுமே பேசினார்கள் எனக் குறிப்பிட்ட பிரதி அமைச்சர், ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்த மக்கள் நலன்சார் நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தனது உரையில் தெரிவித்தார். (அ)

## நல்லூர் கந்தன்...

ஆயிரக்கணக்கான பக்தர்கள், யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வடக்கிற்கு வரவுள்ள நிலையில் எடுக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கு நோக்கிப் பயணிக்கும் மக்கள் நீண்ட காலமாகவே போதிய ரயில் சேவையின்மையாலும், பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத கால அட்டவணையாலும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும், இந்தப் பிரச்னைகள் குறித்து பலமுறை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தும் தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மின் இயக்கத் தொகுதிகள் பற்றாக்குறையே சேவை குறைப்பிற்கான காரணம் எனக் கூறப்படுவது புதிய விடயமல்ல என்றும், ஆண்டின் அதிகபட்ச பயணிகள் வருகை காணப்படும் நல்லூர் திருவிழாவுக்கு முன்னரே அதற்கான தீர்வை அரசு ஏன் ஏற்படுத்தவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், இந்தத் தீர்மானம் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதா அல்லது தனியார் பஸ் உரிமையாளர்களின் நலனுக்கு சாதகமாக எடுக்கப்பட்டதா என்ற நியாயமான சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## இந்தியாவில் இருந்து...

தொடர்ந்து, கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த சட்டவிரோதக் கடத்தல் கண்டறியப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது, கடத்தி வரப்பட்ட 13 படகுகளும், அதில் இருந்த 26 சந்தேகநபர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகளை, உரிய ஏற்றுமதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்களுக்கு ஏல அடிப்படையில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படை மற்றும் பொலிஸார் முன்னிலையில் முன்னெடுத்து வருகின்றனர்.

தொடர்ந்து இடம்பெற்று வரும் இவ்வாறான சட்டவிரோதக் கடல் அட்டைக் கடத்தல்களைக் கட்டுப்படுத்தத் தேடுதல் நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## நீர்கொழும்புச் சிறை...

குறித்த வன்முறைச் சம்பவத்துக்குப் பின்னர் நீர்கொழும்பு சிறைச்சாலை வளாகம் கடுமையாகச் சேதமடைந்துள்ளது. அத்துடன், விசாரணை அதிகாரிகளுக்குக் அதில் பாதுகாப்பாகத் தங்களது புலனாய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இடமளிக்கவும், கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் நீர்கொழும்பு சிறைச்சாலை வளாகத்தை புனரமைக்கும் பணிகளை விரைவாக ஆரம்பிக்கவும் ஏதுவாக, இந்த வளாகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளில் பெரும்பாலானோர் வேறு சிறைச்சாலைகளுக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளனர்.

தற்போது இயங்கி வரும் சிறைச்சாலைகளில் நிலவும் கைதிகளின் நெருக்கடி நிலை மற்றும் அவர்களின் நலன்புரிச் சேவைகளைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள சிறைச்சாலைகளுக்கு மேலதிகமாக, தற்காலிக அடிப்படையில் வேறு பொருத்தமான வளாகங்களுக்குக் கைதிகளில் ஒரு பகுதியினரை இடமாற்றவேண்டிய தேவை எழுந்துள்ளதாக நீதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக, நீர்கொழும்பு சிறைச்சாலையின் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் வரை, தற்காலிக அடிப்படையில் "மஹமோதர" மற்றும் "பழைய போகம்பரை" வளாகங்களைச் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கமைய சிறைச்சாலைகளாக நிறுவுவதற்கான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கைதிகளின் பாதுகாப்பை...

பணிப்புரை விடுத்துள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏனைய சிறைச்சாலைகளில் பதிவான சம்பவங்கள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அத்துடன், மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும், சிறைக்கைதிகளைப் பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து வேறு பல சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்ட கைதிகள் சித்திரவதை மற்றும் பிற வகையான மோசமான நடத்தைகளுக்கு ஆளாக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து ஆணையம் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியது.

மேலும், வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கைதி ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்ட விவகாரம் குறித்தும், ஜூலை 7 அன்று இரவு வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணையத்தின் விரைவுப் பதிலளிப்புப் பிரிவினருக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்தும் அது கவலை தெரிவித்தது.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தனக்குள்ள சட்ட ரீதியான அதிகாரங்களை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், மனித உரிமைகள் ஆணைக்குழு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆணையாளர் நாயகத்துக்குப் பணித்தது.

ஆணைக்குழுவின் அதிகாரிகள் அனைத்து சிறைச்சாலைகளுக்கும் தடையின்றிச் செல்வதை உறுதி செய்தல், சிறைவாசிகளைப் பழிவாங்கும் நடவடிக்கைகளிலிருந்து பாதுகாத்தல், தொடர்புடைய அனைத்துச் சான்றுகளையும் பாதுகாத்தல், முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விரைவான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆணைக்குழுவின் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைத்தல். (அ)

## கைதிகளைத் தேடி...

வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்ட கைதிகளின் பெயர்ப் பட்டியல் சிறைச்சாலைக்கு வெளியே சில இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

இருப்பினும் நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுடைய விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை என அங்கு காத்திருக்கும் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதலில் உயிரிழந்த இந்திய நாட்டவரை அடையாளம் காணும் பணி இன்னும் நிறைவடையவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய பின்னணியில், கைதிகளின் உறவினர்கள் நேற்றும் சிறைச்சாலைக்கு முன்பாக வந்து அமைதியின்மையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## பொதுமக்கள் பாதுகாப்பு...

ஏற்படுத்தியதாக ரவி செனவிரத்னவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்போது, குற்றம் சாட்டப்பட்டவருக்காக முன்னிலையான அவரது தரப்பு சட்டத்தரணி, வீதி விபத்தைத் தடுக்கத் தவறிய முதல் குற்றச்சாட்டை தங்கள் கட்சிக்காரர் ஒப்புக்கொள்ளத் தயார் என நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்தச் சம்பவம் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட கவனம் குறைவின்றி வாகனம் ஓட்டுதல் மற்றும் குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் ஆகிய மற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை தொடருமா என்பது குறித்த தீர்ப்பை வழங்குவதற்காக, இந்த வழக்கை ஒகஸ்ட் 20 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கிடையில், கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் தனக்கு எதிரான விசாரணையை மற்றொரு நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரி ரவி செனவிரத்ன தாக்கல் செய்த மனுவை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்றம், 2025 செப்ரெம்பர் மாத தொடக்கத்தில், நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து ஒரு இடைக்காலத் தடை உத்தரவையும் பிறப்பித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## யுத்த காலத்தில்...

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதி தூய்தாக்கல் தடுப்புச் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

"யுத்த காலத்தில் தமிழர்கள் தங்கள் விவசாயத் தேவைகளுக்காகவும், பிள்ளைகளின் கல்விக்காகவும் வன்னி வைப்பகங்களில் பெருமளவிலான நகைகளை அடகு வைத்திருந்தனர்.

இறுதி யுத்தத்தின் போது, இந்த நகைகள் அடங்கிய கொள்கலன்களை அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்சவின் உத்தரவின் பேரில் இராணுவத்தினர் பொறுப்பேற்றதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பலமுறை பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## அராலி மேற்கு...

அப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மற்றொரு குழு மீனவர்கள் அவதானித்துள்ளனர்.

இதுகுறித்து உடனடியாக உறவினர்களுக்கும் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை மீட்டனர்.

உடல் மேலதிக விசாரணைகள் மற்றும் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளதுடன், வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## சிறைச்சாலை வன்முறை...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதி அமைச்சர் சென்று கள நிலவரங்களை ஆராயவில்லை. அதிகாரிகளுக்குத் தேவையான முறையான வழிகாட்டல்களையோ, ஆலோசனைகளையோ வழங்கத் தவறிவிட்டார். கடந்த ஒன்றரை வருடங்களாக ஒரு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தைக் கூட அரசாங்கத்தால் நியமிக்க முடியாமல் போயுள்ளது.

துஷார உபுல்தெனியவை பதவியிலிருந்து நீக்கியமை தவறான முடிவு என மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. நீர்கொழும்பு சிறைச்சாலையின் பிரதான அதிகாரிகள் இருவர் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பொது நிறுவனத்தையும் அரசாங்கம் அரசியல் கண்ணோட்டத்துடன் அணுகுவதாலேயே ஒட்டுமொத்த நிர்வாகக் கட்டமைப்பும் சீர்குலைந்துள்ளது.

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவத்தின் போது, அப்போதைய அரசியல் போக்கைக் கண்டித்து "அமைச்சர் பதவி விலக வேண்டும்" என தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அன்று வலியுறுத்தினார். இன்று அதே போன்றதொரு சூழலில் இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்க மறுப்பது ஏன்?

1988 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலை உடைப்புச் சம்பவத்தின்போது, அப்போதைய அமைச்சராக இருந்த நிஸங்க விஜயரத்ன மற்றும் பிரதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜா ஆகியோர் உடனடியாகப் பதவி விலகி முன்மாதிரியாகத் திகழ்ந்தனர். அத்தகைய அரசியல் ஒழுக்கம் இந்த அரசிடம் இல்லை.

கைதிகள் மற்றும் அதிகாரிகள் என இரு தரப்பினருக்கும் இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு, அரசாங்கத்தின் மந்தகதியிலான மற்றும் தூக்க நிலையிலான செயல்பாடுகளே காரணம். கடந்த கால சம்பவங்களை ஆராய ஆணைக்குழுக்களை அமைக்கும் அரசாங்கம், முடிந்தால் 1988 வெலிக்கடை சிறை உடைப்புச் சம்பவத்தின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது குறித்தும் முழுமையான விசாரணை நடத்த வேண்டும்.

அரசாங்கம் தனது அரசியல் முன்னுரிமைகளை விடுத்து, சிறைச்சாலைகளுக்குள் நிலவும் இக்கட்டான சூழ்நிலையைக் கட்டுப்படுத்த உடனடியாகத் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# நீர்கொழும்பு நீதிமன்றுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்!

## நீதிபதிக்கு சி.ஐ.டி. அவரச அறிக்கை

கொழும்பு, ஜூலை. 10

நீர்கொழும்பு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படலாம் என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிக்கையொன்றின் மூலம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

நீர்கொழும்பு நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்காலத்தில் பாரியளவிலான அச்சுறுத்தல் நிலையொன்று ஏற்படக்கூடும் என்றும் புலனாய்வுத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அந்தந்த தினங்களில் விசாரிக்கப்படும் வழக்குகளுடன் தொடர்புடைய நபர்களை மட்டும் நீதிமன்ற வளாகத்தினுள் அனுமதிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலைக் கலவரம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மூன்று விசாரணைக்குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன.

அவர்கள் சேகரித்த புலனாய்வுத் தகவல்களின்போதே நீர்கொழும்பு நீதிமன்றத்திலும் அவ்வாறான தாக்குதல் மற்றும் கலவரம் ஏற்படக்கூடிய அபாயம் குறித்த தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் நேரடியாக நீதிமன்றுக்கு சென்று குற்றவியல் நீதிபதியின் உத்தியோகபூர்வ அறையில் அறிக்கையொன்றின் ஊடாக இந்த தகவல்களை தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், நீதிமன்ற வளாகத்தில் உள்ள அனைத்து நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் உடனடியாக குற்றவியல் நீதிபதி அறைக்கு அழைக்கப்பட்டு, குறித்த பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காணி அளவீட்டுக்கு எதிராக மருதங்கேணியில் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை. 10

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் படைத்துறைக்கு 25 ஏக்கர் வரையான காணியை சுவீகரிப்பதற்கு எதிராக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மருதங்கேணியில் அமைந்துள்ள விஜயபாகு இன்வெண்ட்ரி ரெஜிமெண்ட் தலைமைப் பணிமனைக்காக குறித்த காணி அளவீடு மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான பொது அறிவித்தல் வெளியாகியதைத் தொடர்ந்து, காணி அளவீட்டை தடுக்க அரசியல்வாதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் எனப் பலர் சம்பவ இடத்தில் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணி அளவீட்டு நடவடிக்கையை தடுக்கவேண்டும் என்றும், மக்களின் இணக்கமின்றி காணி சுவீகரிப்பு இடம்பெறக் கூடாது என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பாலியல் குற்றச்சாட்டு விசாரணைகளை இழுத்தடிக்காமல் துரிதப்படுத்தவேண்டும்

## யாழ்.பல்கலை முன்பாக நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை. 10

யாழ். பல்கலைக்கழகத்தில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான குற்றச்சாட்டு தொடர்பில் பேராசிரியர் உள்ளிட்ட இருவருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விசாரணைகளை காலத்தை இழுத்தடிக்காது, துரிதப்படுத்த கோரி பல்கலை முன்றலில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக முன்றலில் நேற்று வியாழக்கிழமை காலை "பாலியல் வன்முறைகளுக்கு எதிரான மக்கள் இயக்கம்" எனும் அமைப்பின் அழைப்பில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் உள்ளிட்ட இருவர் மாணவிகளை துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கினார்கள் எனும் குற்றச்சாட்டில், பல்கலைக்கழக மட்டத்தில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் காலத்தை இழுத்தடிக்காது விசாரணைகளை துரிதப்படுத்தக் கோரி, பல்கலைக்கழகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை கேளுங்கள் - அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்". "பல்கலைக்கழகங்களில் பெண்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதி செய்ய வேண்டும்", "குற்றத்தை மறைக்க சட்டத்தை ஆயுதமாக்காதே..." கண்ணியத்தை இழந்து கல்வியை பெறும் இடமா யாழ் பல்கலைக்கழகம் ", தமிழர் பண்பாட்டிற்கு உணர்ச்சி கொள்ளும் பல்கலைக்கழகமே பாலியல் சுரண்டல்களுக்கு மௌனம் ஏன் ?" போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# சிறுபோக நெல் கொள்முதல் 15 ஆம் திகதி முதல் ஆரம்பம்

## ரூ. 16 பில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை. 10

இந்த வருட சிறுபோகத்திற்கான நெல் கொள்முதல் நடவடிக்கைகளை, எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி முதல் துரிதமாக ஆரம்பிக்க நெல் சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நெல் கொள்முதல் பணிகளுக்காக திறைசேரியினால் 6 பில்லியன் ரூபாய் நிதி நேரடியாக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களின் பணிகளை ஊக்குவிக்கும் வகையில், அரச வங்கிகள் ஊடாக மேலதிகமாக 10 பில்லியன் ரூபாய் கடன் தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக முன்னெடுக்கப்படும் இந்த நெல் கொள்முதல் திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக, மாவட்ட செயலாளர்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# நெடுந்தீவில் நேரகாலமின்றி மின் தடை பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் அவதி!

யாழ்ப்பாணம், ஜூலை. 10

நெடுந்தீவு பிரதேச மின்சார விநியோகம் கடந்த சில நாள்களாக சுழற்சி முறையில் இடம்பெற்று வருவதனால் மாணவர்களும் மக்களும் பல சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக குற்றம் சட்டியுள்ளனர்.

பாவனையில் இருக்கும் இயந்திரங்களில் சிறிய இயந்திரம் ஒன்று திருத்தமுடியாதளவு பழுதடைந்துள்ளதால், அதனது வழமையான செயற்பாட்டு நேரங்கள் மட்டும் சுழற்சி முறையில் விநியோகிக்கப்படுவதுடன், வலுக்கூடிய இயந்திரம் இயங்கும்போது முழுமையாக விநியோகம் இடம்பெறுவதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை, மாற்றீடாக புதிய இயந்திரம் வரும்வரை இந்நிலை தொடருமாயின் எதிர்வரும் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சை, தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை என்பன இடம்பெறவுள்ள நிலையில் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. (அ)

# புலம்பெயர் இலங்கையர்களுக்கு வாக்குரிமை, ஓய்வூதிய திட்டங்கள்!

## தீவிர கவனம் செலுத்துகிறது அரசு

கொழும்பு, ஜூலை. 10

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்குரிமை வழங்குவது தொடர்பான முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்கும் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்குரிமையை வழங்குவது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சின் ஊடாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், இதற்கான முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதேபோல், வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புலம்பெயர் தொழிலாளர்களின் பணிபுரியும் கால அளவு வெவ்வேறாக இருப்பதாலும், அதற்கேற்ப ஒரு பொதுவான சூத்திரத்தை உருவாக்குவதில் நிலவும் சிக்கல்கள் காரணமாகவும் இந்தத் திட்டம் குறித்த பணிகள் இழுபறியில் உள்ளன.

எவ்வாறாயினும், இதற்கான பணிகள் நிறைவடைந்தவுடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்" என்று அமைச்சர் உறுதியளித்தார்.

மேலும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் தங்களின் பிரச்னைகள், ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை நேரடியாக அரசாங்கத்துக்குத் தெரிவிக்கும் வகையில் "லங்கா கனெக்ட்" எனும் புதிய செயலி மற்றும் இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.07.2026 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org